# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
# OS.No.68/2018
# வழக்கு சாட்சி PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பாலசுப்பிரமணியம்** | தொழில் | : ஓவியர் |
| தகப்பனார் பெயர் | : முனுசாமி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : கொடைக்கானல் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 57/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 19.11.2025 |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன் . நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. எனது தாயார் பிச்சையம்மாளுக்கு வழங்கப்பட்ட பி மெமொ நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. எனது தாயார் பிச்சையம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்து இரசீதுகள் ( 6 எண்ணம் ) அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 01.04.2010 தேதியிட்ட வெட்டுக்கூலி கிரையப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 01.04.2010 தேதியிட்ட ஜெனரல் பவர் அட்டார்னி பத்திரம் அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. அசல் வழக்கு எண் .73/2015 என்ற வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. அசல் வழக்கு எண் .73/2015–ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. நான் 1ம் பிரதிவாதி மீது கொடுத்த புகாரின்பேரில் கொடைக்கானல் காவல்நிலையத்தில் வழங்கப்பட்ட மனு இரசீது அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்

(வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும் , மேற்சொன்ன ஆவணங்கள் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது )

**(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.11.19 18:06:01 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.